# ஆதி மார்க்க னீதி மொழி

October 2023

இதழ் 27 – அக்டோபர் மாதம் 2023 வெளியீடு
© AMNA Trust, Chennai



Copyright © AMNA Trust, Chennai



**மூலமந்நிரம்**

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்னோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

**பாத பூஜை**

சுயம் பிரகாச னித்தியானந்ந பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்ந தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்னளுக்கே னமஸ்காரம்.

**மகாசங்னல்ப மந்நிரம்**

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் னோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்னாலங்னளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்னள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்னள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே, எதார்த்த நன் மன சற்சன மக்களே, அவை நிகழ்வு பத்துடனும், இசை வகுப்பு நிகழ்வு ஒன்றுடனும் 27வது இதழாக, ஆதி மார்க்க னீதி மொழி மின்னணு சஞ்சிகை மலர்ந்துள்ளது. இம்மாத சிறப்பாக முழுமுதற் கடவுளாம் விநாயகப் பெருமானின் ஜெயந்தி நாளாகிய விநாயகர் சதுர்த்தி தினத்தில் விநாயகர் அகவலும், மேலும் மிலாடினபி தினமான நபி பெருமானின் அவதாரத் திருநாளதில் அவர்களின் சிறப்பும், இவற்றுள் பாத ரகசியம் பற்றி படித்து பயன் பெற வேண்டிய தேவ ரகசிய செயல்களும் பகிரப் பெற்றுள்ளன. நான்மறை அரசு திக்கெலாம் புகழும் மக்கமா நகரின்கண் எழுந்தருளிய புனித கோமள நீங்கா நன்னிலத்து வேந்தராகிய முகம்மது சல் ஆலனபி அவர்களே சபூர் தவ்ராத் இஞ்சில் புர்கான் என்ற நான்கு வேதங்களுக்கும் அரசர் என்பது தேவ ரகசியச் செயல் அறிந்த மக்களுக்கே தெரியும். நான்கு மறைகளும், கோடானு கோடி மறைகளும், பாதமெனும் ஒரு பொருளின் சிறப்பைப் புகழ்ந்தே பேசப் பெற்றுள்ளன.

மேலும் இம்மாத சிறப்பாக ஆதி மார்க்க நீதி அவையின் நீதி வழி பற்றித் தொடரும் தம்பதியினர்களின் புதல்வர்கள் புதல்விகள், அஜய்கிருஷ்ணன் - சஹானா, பிரவீன் - திவ்யபாரதி, பரணிதரன் - தரணிஸ்ரீ இவர்களின் திருமண வைபவ சிறப்பும், சிறப்பின் சிறப்பாக மின்னணு சஞ்சிகையின் 2022 ஆண்டு மலர் 18-09-2023ம் தேதி சிவகாசியிலும் வெளியிடப் பெற்றது.

வரலாற்று சிறப்பு மிக்க நாளாக, அவரவருள்ளும் பொறிகள் ஓடாத இடமான இடத்தை தொட்டு உணர்த்துவதற்கான ஓர் இடமாக ஆதி மார்க்க னீதி அவைக்கென ஓர் இடம் பதியப் பெற்று சரவண நந்தவனம் என நாமமும் சூட்டப் பெற்றது. இம்மாத சஞ்சிகையினுள் உற்றெழுத்து உணர்த்தல் என்ற கட்டங்களில் உரிய விடை பகிர்ந்த அன்பர்கள், மற்றும் நன்கொடை வழங்கிய அன்பர்களின் பெயர்களும் பதியப் பெற்றுள்ளன. பணம் சம்பாதிக்கும் நோக்கம் இன்றி நித்திய மகிழ்ச்சியை விரும்பும் மனுவுக்கு அதை வழங்கவும், தெய்வீக உண்மைகளை உணர்த்தக் கூடிய அவையாகவும் ஆதி மார்க்க னீதி அவை விளங்குவதை உணர்ந்து அறிந்து மேலும் நன்கொடை வழங்க இருக்கும் அன்பர்களையும் வாழ்த்தி வரவேற்கிறோம். இம் மின்னணு



Copyright © AMNA Trust, Chennai

**சஞ்சிகையின் பொக்கிஷங்களை பார்த்து படிக்கும் மக்கள் யாவரும் தன்னையறியும் இன்னில வாழ்வில் தலையிட்டு வாழ வாழ்த்துகிறேன்.**

**நமஸ்காரம்.**

சாலை ரவி

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

*சாவுக்கும் வாழ்வுக்கும், அதனதன் பலாபலன் ஒளிவு மறைவு இன்றி அடையாளத்துடன் இறுதி னேரத்தில் வந்து விடுகிறது. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். ஒருவன் ஒரு துக்கத்தைக் கண்ணால் பார்க்கிறான் அல்லது மனத்தில் னினைக்கிறான். இன்னொருவன் மகிழ்ச்சியைக் கண்ணால் பார்க்கிறான் அல்லது மனதில் னினைக்கிறான். இரண்டு பேருடைய முகமும் தோற்றத்தில் ஒன்றாகவா இருக்கும்? இருக்காது. ஒருவன் கடைசியில் காலனுடைய கொடூர னரக அமளியில் னுழைகிறான். அந்நக் கொடூர அமளியைப் பார்த்ததும் உண்டாகின்ற பயங்கர அவலட்சணம் அப்படியே அவன் முகத்தில் படிந்து விடுகிறது. ஆனால், இன்னொருவர்கள், இறுதித் தருவாயில் அளவற்ற அழகும் அளவற்ற மணமும் அளவற்ற இனிமையும் பொருந்நிய சுவர்ணபூரண உலகுக்குள் னுழைகிறார்கள். அந்நப் பொன்னுலகின் மேலாம்பரமான மகா அதிசய வண்ண எழிலினைப் பார்த்தவுடன் உண்டாகின்ற எக்களிப்பும் மகிழ்ச்சிப் பூரிப்பும் அவர்கள் முகத்தில் அப்படியே மின்வீசி னிற்கிறது. இல்லாவிட்டால் முகம் அப்படிச் சிரித்தவண்ண மிருக்குமா? அந்நப் பேரின்ப உலகிற்குள் னுழையும்போது தங்கள் பெண்டு பிள்ளை தாய் தந்நை எவரையும் தேட எண்ணம் வராது. அவர்கள் கிட்டே வந்நாலும், “தூ” என்று துப்பி எட்டி உதைத்துத் தள்ளிவிட்டுப் போகும். காலமெல்லாம் வறுமையில் வாடிய ஒருவன் திடீரென்று பெரும் புதையலைக் கண்ட பின்னும் முந்நிய வறுமை வாழ்க்கைக்குத் திரும்பவா மனம்வரும்? தங்கள் உற்றார் உறவினர் எல்லாம் தூரப்பட்டுப் போய்விடும். சுற்றி இருப்பவர்கள் துக்கத்தோடு அழுதுகொண்டு இருக்க, தாங்கள் மட்டும் மகிழ்ச்சி பூக்கும் இளனகையோடு காணப்பெறுவார்கள். அந்ந னேரத்தில் இந்ந உலக சம்பத்தெல்லாம் அவர்களுக்கு எட்டிக்காயா யிருக்கும். இங்கே தங்கமலை வைரமலையாய்க் கொட்டிக் குவித்து வைத்துக்கொண்டு வா வா என்று அழைத்தாலும், அவர்கள் னினைவு அவற்றை எட்டியுதைத்து விட்டுப் போகும். ஜீவப் பிரயாணமானவர்களைப் பார்த்து, “இது தன் மனைவி, தன் தாய், தன் சொந்நம்” என்று சுற்றியிருப்பவர்கள் னினைத்துக் கொள்ளுகிறார்கள். ஆனால், அவர்கள் ஜீவனோ, தன் சாதி வேறே, குலம் வேறே, மதம் வேறே என்று போகிறது. வாழையடி வாழையாக அது எந்ந எல்லையிலிருந்து இவ்வுடல் எடுத்து வந்நதோ, அந்ந தேவத் திருச்சன்னிதியினிடத்தில் போய்ச் சேர்ந்நுகொள்ளுகிறது.*

*~ சாலை ஆண்டவர்கள்*



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2023 செப்டம்பர் மாத அவை நிகழ்வுகள் – 2023 அக்டோபர் மாத வெளியீடு

**07-09-2023 ~ வியாழக்கிழமை சபை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீ. குமரேசன்**

சாலை ஆண்டவர்கள் அருளிய **என்ன காலமிறைவன் திருவருள்...** என்ற தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:** 64 கலைகளுக்கும் மேம்பட்ட ஓர் கலையான சாகாக்கலையை அருளுகின்ற, வாழும் கலை வல்லவர், கலைகளை மாற்றும் காலனை தன் கைவசமாக்கும் செயலே பிரம்மவித்தை. முடிவற்ற தோராத உச்சி வட்டத்துள் நித்திய வாழ்வு பெறவே பெரியோர்கள் நம்மை அழைக்கிறார்கள்.

**வான்மதிக் கொரல்: வாக்கியம் எண் 120 - தொடர்ச்சி:** பிழைப்பதற்காக ஒருவனுக்கு கொடுத்த பணத்தை சூதாடி தொலைத்தது போல், நித்திய வாழ்வுக்காக இறைவன் தந்த அமானிதத்தை அனித்தியத்திற்கு செலவு செய்து நரகிற்கு ஆளாக்கி அதோ கதியாக்குவது ஒருவனுடைய மனமே. அடங்காத வெறி கொண்ட மனதையே வேதம் பேய் என்கிறது.

**குருபிரான் அருளமுதம்:** பயங்கொளி உளத்தாரிடம் இருப்பதே பேய். நித்திய வாழ்விற்காக இறைவன் நமக்கு கடனாக தந்த அமானிதம் ஏழு நிலைகளாக திருவடியாக பிரம்மமாக சப்தகிரியாக உள்ளது. இதுவே அறிவிருக்கும் தலம். இதை உணர்ந்தால் நாம் அறிவு வடிவு. அமானித கடன் நாம் வாங்கி வந்ததற்கான சாட்சி, ஐயறிவு வரை உள்ள ஜீவபேதங்கள் திட்டோராததும் நாம் திட்டோர்வதுமாக உள்ளது. மனதுடன் வாழாமல் அறிவுடன் வாழ்வதே ஆறாவது அறிவின் இலட்சணம்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **அழகு அணி சித்தர் பாடல் எண் 28: உன்னை மறந்தல்லோ உளுத்த மரமானேன்...** மனிதன் ஐயறிவு நுகர்ச்சியில் வாழாமல், ஆறாவது அறிவை ஆசான் மூலம் அறிய வேண்டும். ஞான வாழ்வில் தன்னை மறந்து இருக்கும் செயலே தன்னை அறிதல். நாம் உடலல்ல, ஜீவன் என உணரச் செய்யும் குருவே தாயும் தந்தையும் தெய்வமுமாக உள்ளார். அக்கெனும் பிரம்மமாகிய கண்ணம்மாவுடன் ஒத்து வாழ்வதே ஒத்தது அறிந்து உயிர் வாழ்வதாகும்.


**குருபிரான் அருளமுதம்: தெய்வத் தேடு கூடகம்:**
ஏதுமிலதாய் யாதுமுளதாய் அவரவரிடத்தும் அகத்தில் உள்ள ஒரு பொருளை நாட, நாடகத் தமிழாக ஆண்டவர்கள் அருளியதே தெய்வத் தேடு கூடகம். ஐயறிவு வரை உள்ள ஜீவபேதங்களை ஆள்கின்ற பேரறிவு மனிதனிடத்தில் உள்ளது. **பூமிய டங்கலுக்கும் ஓதும்பு ராதனங் நூறுவது** என்பது தேகம் என்ற மண்ணாகிய பூமியில் மனம் அடங்குவதற்கான வழிகளும், உளவுகளும் கூறுவதாகும். தன்னையறியும் ஒரு செயலுக்காகவே புராண, இதிகாசங்கள் பெரியோர்களால் உண்டாக்கப் பெற்றன. ஆசான் அருளும் அமுதத்தை தேடி உண்பவர்களே மனு. இதற்கு எதிரானவர்கள் அசுரர்கள். மனுவின் முகத்தில் விரை பிரம்மம் வைத்து படைத்த பின்பே மறைபடா தேவராகின்றனர். அவரவரும் தன் அகத்தை அறிய வேண்டும் என்பதே பெரியோர்களின் நாட்டம். அறம்-பொருள் உணர்ந்தவன் சித்தத்தில் இறைவன் உள்ளார். குறைக்க முடியா சேமனிதியின் குடி வீடேறியவர்கள் எக்காலத்தும் அனந்தர்களே. ஒலிவா மலையின் மூதுரைக்கு உகந்தவர்களே தெய்வ மீட்புக் குலக்குழு என ஆண்டவர்கள் அருளிய ஆசீர்பாதம் பெற்ற மக்களாக ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள் உள்ளனர் என அருளி குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.



Copyright © AMNA Trust, Chennai 

**14-09-2023 ~ வியாழக்கிழமை சபை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. விஜயசித்ரா**

**குருபிரான் அருளமுதம்:**



பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழிச் சாலை ஆண்டவர்களின் திருவடி போற்றி அவை உதயமானது. அழியாத பொருளை அறிந்து அதன் மீது செலுத்தும் னிஜமான பக்தி எனும் சொல்லே வார்த்தைகளில் மிகவும் மேலானது. ஜைமினி, சாந்தனு, வைசம்பாயர் ஆகியோர் வெளியாக்கிய வேதங்களை தொகுத்து வேதவியாசர் வழங்கிய நான்கு வேதங்களும் கற்று, இலக்கு, பொருள் தேடிப் பயணம் செய்யும் தெய்வத்தேடுபாடு உடையவர்களே தேடுகூடகர்கள். தேடிய பொருளை அடைந்து பிரம்மத்தைக் கூடியதும் பிரம்மகூடகர்கள் ஆனார்கள். தேடுவதற்குரிய பொருளும் இலக்கும் பயணமும் தெரியாமலே வந்த நாம், ஆண்டவர்களின் ஆசீர்பாதத்தால் அவர்கள் அருளிய **னித்தியரிடத்திற் கற்றேல் னிசத் தொழுகை யுன்கை கூடும்** என்ற னிஜத் தொழுகையின் உன்னதத்தையும், உள்ளபோதே அடக்கத்தை மடக்கிப் பிடிக்கும் திருச்செயலையும் நாம் உய்யும் பொருட்டு செய்யாமல் செய்த பெருமானின் உதவிக்கு ஈடாக வையகமும் வானகமும் ஆற்றல் அரிது என்பதே உண்மை.

**வான்மதிக் கொரல் வாக்கியம் எண்:120 – தொடர்ச்சி:** ஒருவனை அதோ கதிக்கு ஆளாக்கி, தான் இச்சை பட்டது கைவசமான பின்பும், ஓயாது அலைந்து இறுதியில் மீளா அவஸ்தையில் மாட்டிக் கொள்ளும் மனதையே வேதம் பேய் என்கிறது. உள்ளதையே போதுமாக்கும் ராஜரீக தேவகுணம் கொண்ட பெருந்தகை செம்மல்களே, தெய்வ அடி நிழலில் காத்துக் கிடந்து எமனச்சம் நீங்கப் பெற்ற ஐசுவரியமானவர்.

**குருபிரான் அருளமுதம்:** குற்றமே நீ செய்தாலும் அதை குணமாகக் கொள்வதே பெரியோர்களின் இயல்பு. **பணியுமாம் என்றும் பெருமை சிறுமை அணியுமாம் தன்னை வியந்து** சர்வ ஐஸ்வர்யங்களுக்கும் விளைவு உதய வித்தாக விளங்கும் ஜீவனை, அதோ கதியில் பாழாகாமல் கவனத்தோடு சேர்த்து மௌன ராகமாம் கவன காவிய ஐவழி விளைவின் அப்பாலாகிய மெய்வழியில் ஆக்கி வைப்பதே பெரியோர்களின் செயல்.

ஜீவசகோதரர் தியாகராஜன்: அழகணிச்சித்தர் பாடல் எண்: 29 **காயப் பதிதனிலே... விழுந்ததென்ன** காய்ந்து போகும் உடலினுள் காயாத ஓர் பொருளான உயிரின் வாசத்தை அறிய வைப்பது கந்தம் வீசும் ஆசானின் வாய்மையே. நம் ஆயத்துறை காவலர்கள் துவாரபாலர்களின் அனுமதி பெற்றே கடவுள் இருக்கும் கருவறையுள் னுழைய முடியும். மாயையினால் வீணாகும் நம் ஜீவனை, ஒரு மொழி கீதையால் வீணாகாமல் காத்து, கண்ணம்மா எனும் கருணைத் தாயின் மடியில் தஞ்சம் புகச்செய்து பிரம்ம கூடகர்களாக ஆக்க வல்லவர்களே மெய்க்குருபிரான்.

**குருபிரான் அருளமுதம்:** ஞான சபையை குறிக்கும் சுத்த நினைவே ஏடு என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். வள்ளல் பெருமானும், பிரகாச ரூபமாக விளங்கும் ஞான சபையே இறைவனாகவும், அதன் காரணம் தீபமாகவும், தீபத்தின் அசைவே நடனமாகவும் ஜீவனின் ரகசியமாகவும் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் சிரஞ்சீவி:* **அருட்பெருஞ்ஜோதி அகவல்: திருநிலைத் தனி வெளி....... அத்துவிதச் சபை அருட்பெருஞ்ஜோதி** வெளி என்பதை கொண்டே இவ்வுலகில் சர்வத்தையும் அறியவும் அனுபவிக்கவும் முடியும். ஞானாகாயப் பெருவெளியே இறைவன் இருக்கும் பரிசுத்த இடம். அங்கு செல்ல அறியாமை இருளை வெட்டும் வெளியை அறிய வேண்டும். கோசம் எனும்



Copyright © AMNA Trust, Chennai

ஏதுமற்ற பூஜ்ஜியத்தை உணர வல்லவன் மனு ஒருவனே. ஜீவன் இருக்கும் சிவ வெளியைச் சார்ந்தே ஐம்பூதங்களும் உள்ளன. **துன்றுமல வெம்மாயை அற்று வெளிக்குள் வெளி கடந்து சும்மா இருக்கும் சுகம்** என்பது ஆசான் வெளியாக்கும் வாய்மையில் தான் உள்ளது.

**குருபிரான் அருளமுதம்:** வீடு என்பது இருந்தால் தான் வெளி இருக்கும். விண்டெங்கும் வெளியாகாத இறைவன் மனிதனின் சுத்தத் துறை இருதயத்தில் மட்டும்தான் வெளியாகிறான். தன் பெருவெளி என்ற சாலையில் எல்லாம் ஏலவல்லவர் வந்து இணையும் அக்காலத்தில் நாம் பிறக்கும் மறுபிறப்பே முந்தின கடமை.

**குருபிரான் அருளமுதம் - தெய்வத்தேடு கூடகம்:**
*அனந்தாதி தேவர்களுக்குத் தீர்க்கதரிசனம் கூறுவது:* முக்காலமும் விளங்கும் மெய்ஞ்ஞானத்தை கணித்து பெரியோர்கள் அருளியதே தீர்க்க தெரிசனம். துவாபரயுகத்தில் வந்த பராசர முனிவரின் கிரந்தத்தில் உள்ள பூசம் நட்சத்திரத்தின் தீர்க்கதரிசனக் குறியீடும், ஏகராசியில் வரும் கல்கியின் ரகசியமும், கலியின் செயலையும் தன்னில் அறிபவனே மூதுரைக்கு உகந்தோன் என்கிறது தீர்க்கதரிசனம். எம்மதமும் சம்மதமென இருக்கும் அறுபடை வீடாகிய அறுசுவை ஒளிக்கும் ஆரூரான் இருக்கும் அமரிடத்தை, இருக்கும் போது அறிந்தவனே அமரன். சர்வ மதங்களின் இருப்பிடமாகிய அறிவெனும் பாதத்தை அருளும் சொற்சத்தி மனுமகனின் அமுதத்தை உண்டு பெருகியதே குருகுலம். சாகுமுன் சாகப்பழகும் வித்தை பெற னீதமாங் நும்பல் நுழையும் இடமே ஆவிடையாக உள்ளது. மனுவுக்குள் இருந்து சர்வத்தையும் படைத்து அழித்துக் காத்திடும் வஸ்துவை அறிய வைக்கும் அறிவைக் குறித்து சாட்சி சொல்ல வந்ததுவே தீர்க்கதரிசனம். பட்டும் பட்டாடை என்பதெல்லாம் நம் கற்பனைக்கும் எட்டாத நாம் தங்கக்கூடிய அழியா நாட்டினைக் குறிப்பதாக உள்ளது. ஆண்டவர்களின் கையொப்பமுடன் வெளியாக்கப் பெற்றுள்ள நமது வேதனூல்களைப் படிப்பதே நாம் பெற்ற பெரும் பாக்கியம் என அருளி குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.

## 16-09-2023 ~ சனிக்கிழமை சபை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

சாலை ஆண்டவர்கள் அருளிய **ஆறிரு சமயத்திற்கும் அறிவுரை தெய்வமாகி ...** என்ற தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர்:* சர்வ மதங்களின் னோக்கம் மறலி கை தீண்டாமையே என்ற அரும்பெரும் செயலை உணர்த்தவே பெரியோர்கள், அகசமயம் ஆறு, புறசமயம் ஆறு என பனிரெண்டு சமயங்களை உண்டாக்கி மக்களை சீரிய வழியாகிய அறிவின் வழியில் கூட்டிச் செல்கிறார்கள்.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் வாக்கியம் எண்144 :** எமபயத்தைக் கடத்தாட்டி வைக்கின்ற அனாகத ரக்ஷகரைத் தேடிக் கொள்வதற்கு மனிதர்களின் னினைவை எச்சரித்துத் தூண்டவே ஒவ்வொரு மதமும் வந்தது. மதத்தின் இருப்பிடமாகிய தன் எனும் ஜீவகுகையில் அவரவரின் மூன்றாவது கண்ணை திறந்து காட்டி குடியேற்றி வைக்கும் மெய் குருபிரனை தேடி அடைவதே மனிதனின் தலையாய கடமையாகும்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **பரிசுத்த வேதாகமம் - யாக்கோபு அதிகாரம்:1 திருவசனம்:18** *அவர் சித்தம் கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் னாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெனிப்பித்தார்.* கர்த்தர் தன் ஜீவசுவாசத்தை ஊதி ஜீவாத்மாவாக ஜெனிப்பித்த பிறகே, நாம் அமானிதம் எனும் முதற்பொருளின் பலனை பெற்று யுகவித்துக்குரியவர்கள் ஆகிறோம்.
**யோவான் அதிகாரம்:1- திருவசனம்:5** *அவருடைய வசனத்தைக் கைக்கொள்கிறவரிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும், நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதனாலே அறிந்திருக்கிறோம்.* கர்த்தராகிய குருபிரானின் வசனத்தை கேட்பதோடு



Copyright © AMNA Trust, Chennai 

மட்டுமல்லாமல் செயலாக மாற்றிக் கொண்டவர்கள் மீதே மெய்யான தேவ அன்பானது பெருகி பூரணத்துவம் அளிக்கும்.

**குருபிரான் அருளமுதம் - தெய்வத்தேடு கூடகம் :** சீரான் குரான் வேத சாட்சிகள் வைத்து மெய்ஞானத்தை நடத்தும் இடமே ஊறல்மலை. பிரம்ம பீடமானது மெய்ப்பாதையில் தேவர்களை வழினடத்தி ஓர் குலமாய் சமத்துவ நிரூபணையுடன் வாழ வைத்து னீதியை உணர்த்தி பொற்சபையில் குடியேற்றும் திருச்செயலே தீர்க்கதரிசனமாக அருளப்பெற்றுள்ளது. சமூகத் தாயின் னாதம் மூலம் அறிவுப் பிறப்பில் பிரண்டு னீதி கோட்டில் ஏறியவர்களே பிரளய செம்மல்களாகத் திகழ்கிறார்கள். முப்பொருள் கோல விளக்கத்தை செயல் அனுபவமாக பெற்றவர்களே பரிசுத்த **இஸ்-லாம்** எனும் உயிர் னிலையை அடைந்தவர்கள். அவர்களே சாவாவரம் பெற்று ஆசானின் பரிசுத்த னினைவில் னிலைத்து னின்று சுத்தத்தில் ஆகிக் கொள்கிறார்கள் என்ற ஆசீர்பாதத்துடன் ஆசான் அவையை இனிதே னிறைவு செய்தார்கள்.

**17-09-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. பானுமதி குமரேசன்**

**குருபிரான் அருளமுதம்:**
அண்டவெளியில் உள்ள நட்சத்திரம், சூரியன், சந்திரன் மற்றும் கோள்கள் யாவற்றுக்கும் ஒளி கொடுப்பது இந்த பிரபஞ்சம். அதுபோல் மனிதனின் காதுகளுக்கு சத்தமாகவும், மூக்கில் வாசனையாகவும், கண்ணுக்கு வெளிச்சமாகவும், வாயினில் ருசியாகவும், உடலில் உணர்வாகவும் இருப்பது எதுவோ அதுவே பிரபஞ்ச ஆற்றலாகும். குணமற்று, நிறமற்று, பளுவற்ற னிலையில் பஞ்ச பூதங்களுக்கும் சக்தி கொடுப்பவனுக்கு பெயர் பிரபஞ்சன். இதனை அறிவதுவே ஞானம். ஓரறிவு தாவரம் முதல் ஆறறிவு மனிதன் வரை மெய்ஞானம் என்பது வரம்பு கடந்த ஒன்றாக உள்ளது.

**கற்றதினால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழார் எனின்** என்ற திருக்கொரலின் படி னற்றாளை அறிவதே கற்றதின் பயன். நம்மை தாங்கி, தூக்கிப் பிடித்துக் கொண்டிருப்பது எதுவோ அதுவே னற்றாள். வாசனை, கேள்வி, இருகண், வாய் - எவைக்கும் வல்லமை அளிக்கும் அக்கண்ணாக, சந்திர சூரியன் இல்லாத இடமாக, இருதயமாக உள்ள னற்றாளை தரிசனம் செய்து சதா சர்வ காலமும் அதனுடன் வாழ குருவின் அருள் ஒன்றே துணை.

**மானிலத்தில் அம்பலவர் மாணிக்க வாசகர்க்குத் தானளித்த போலளித்த சற்குருவை யான்மறவேன்** என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ள படி நமக்குள் இருக்கும் இறைவனை காட்டிக் கொடுப்பவரே குரு. நமது அகமிய ரகசியங்களை அறிவிக்கவே புற அடையாளங்களாக ஆகமவிதிப்படி கோவில்கள் பெரியோர்களால் உண்டாக்கப் பெற்றுள்ளன. குருவின் அருளால் தன்னிலை கண்டுணரும் நாளே மெய்ஞான நாளாகும். மனுமுளை துவங்கிய காலம் முதல் உபதேசம் என்பது குரு பாரம்பரியமாகவே வருகிறது.

அணுவுக்கு அணுவாய், அண்ட பிரம்மாண்டமாய் இருப்பது விஸ்வம். நமக்குள் இருந்து நன்மை தீமை இன்னதென அறிவித்து பாதுகாப்பதுவே அறிவு. குருவின் துணை கொண்டு மனதை அறிவாக மாற்றும் செயலே பிரம்மவித்தையாகும். குருவருளால் மனம் அறிவாக மாறி அறியாமை விலகும் போதே ஆறாவது அறிவு இன்னதென அறிய முடியும். அப்பொழுதுதான் பரலோக ராஜ்ஜியம் சமீபமாகும். ஞானத்திற்கான கல்வி, பழக வேண்டிய ஒன்றாக மெய்உணர்வு சார்ந்ததாக உள்ளது. குருவின் தயவால் ஒண்டி ஒரு மனமாக நாம் செய்யும் மெய் வணக்கமே, காஷாயம் அணிவதற்கு அருகதை உள்ளவர்களாக நம்மை மாற்றும். ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களுக்கு இது செயலுடைய அனுபவமாக உள்ளது என அருளி குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.

*குருவின் கிருபையாகிய பிரசாதத்தாற்றான் பிரம்மா, விஷ்ணு, சிவன் முதலிய யாவரும் சிருஷ்டி ஸ்திதி சங்நாரத் தொழில்களில் சாமர்த்தியத்தைப் பெற்றார்கள்.*
***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

**17-09-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமாபதி வெங்கட்**

சாலை ஆண்டவர்கள் அருளிய **அண்டங்ங ளவனி யானவெப் பொருளும்...** என்ற குருமணி மாலை பாடலுடன் அவை மலர்ந்நது.

*ஜீவசகோதரர் கௌதம்:* மெய், பொய்யும் பிரித்துக் காட்டும் தூலமே வேதம் என நம்மிடம் நிரூபணை செய்பவரே மெய் ஆசான். னரரை மனுவாக்கி பின்னர் தேவராக்க வான னாட்டிலிருந்து ஒவ்வொரு காலத்திலும் இறங்கி வருபவரே குரு. அண்ட சரா அசரா பொருள் அனைத்தும் அவரவர் முகத்தில் காட்டி வைப்பவரான, வினை தீர்க்கும் வினாயகராம் குருவின் னோக்கம் அறிந்து, இணங்கி இருத்தலே ஜென்ம சாபல்யம் பெறுவதற்கான வழி. வேதக்குன்றாக வரும் மெய்ஆசானின் நாமம் **தொல்புவியும் வானும் கொள்ளா** என்பதனை அவரைத் தொடர்ந்து நிலைத்திருக்கும் நன்மக்களே அறிவர்.

ஆறாவது அறிவான மனமே அகத்தில் சூக்குமமாக, எண்டிசைக்கும் னானென முன் னிற்கும் பஞ்ஞாட்சரமாக, இறைவனாக, னம்மை ஒரு தலைமுறை காலம் தூக்கி சுமந்து கொண்டு உள்ளது. ஆசான் அருளால் மனம் எனும் பொருளறிந்து வினையெனும் மும்மலமறுத்து அறிவின் வழி வாழும் வாழ்வே வாழ்வாங்கு வாழ்வு.

**மூஷிக வாகன மோதக ஹஸ்த**
**ஷியாமள கர்ண விளம்பித சூத்ர**
**வாமனரூப மஹேஸ்வர புத்ர**
**விக்ன வினாயக பாதனமஸ்தே**

மூஷிகம் எனும் மூஞ்ஞூறு, பிள்ளையாரை தூக்கி சுமந்து செல்லும் வாகனம். இதன் தத்துவம் யாதெனில் னம்மையும் அது போல் தூக்கி சுமக்கும் மூஷிக வாகனமான உயிராகிய ஜீவனைக் குறிப்பதாக உள்ளது. பிள்ளையார் கரத்தில் இருக்கும் மோதகம், குருவாக வரும் பெரியோர்களின் அருளமுதம் என்பதாக உள்ளது. அதனை செவியின் வழியாக உட்கொள்ள நம் பிறவிப் பிணி தீரும். இதனையே வள்ளல் பெருமான் **னல்ல மருந்நு இம் மருந்நு – சுகம் னல்கும் வைத்திய னாத மருந்நு** என அருளியுள்ளார்கள். ஷியாமளம் எனும் கருனீலம், நமக்குள் கிருஷ்ண பகவானாக விற்றிருக்கும் பசுவாகிய ஜீவனையும், மஹேஸ்வர தத்துவமாக நம்மிடம் காற்றின் அம்சமாக உள்ள, திவ்ய திருவடி கமல பாதங்களுக்கே னமஸ்காரம் எனும் அகமிய ரகசிய பகிர்வுகளுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே னிறைவுற்றது.

**18-09-2023 ~ திங்கட்கிழமை ~ விநாயகர் சதுர்த்தி சிறப்பு அவை ~ சிவகாசி**
**தொகுப்பு: ஸ்ரீமதி. விஜயசித்ரா**

**குருபிரான் அருளமுதம்:**

அஸ்மானகிரி அடியில் அமர்ந்த விநாயகரின் தத்துவ உருவ சிலையுடன், **ஐந்து கரத்தனை ஆனை முகத்தினை...** என்ற விநாயகர் அகவல் காப்புடன் அவை உதயமாகியது. **கூவுதையா சேவல் கூவுதையா...** என்ற காகபுசுண்டர் பிரானின் தீர்க்க தரிசனம், தேவ ரகசியங்கள் பொதிந்த முழுமுதற் கடவுளாகிய ஆனமுக கணபதியின் சிறப்பைக் கூறுகிறது. உலகெங்கும் கோவில் கொண்ட விநாயகரே, பிச்சுவாக் கொண்டு கீறிப் பிளந்நு நம் பித்தெடுத்து வாயைத் தைத்து வடுவின்றி வைத்தியம் செய்யும் மருத்துவர். பிள்ளையார் சுழியே, ஏகாட்சரமான சிவமயப் பொருள். இதுவே மனித உற்பனத்தின் காரணமான ஒரு தலையும் வாலுமான உகாரப் பொருளாக தமிழ் உயிர் எழுத்துகளில் ஐந்தாவதாக விளங்குகிறது. விநாயகரின் மூஷிக (மூஞ்ஞூறு) வாகன சிறப்பை ஒரு மெய்ஆசானின் அருளால் தான் அறிய முடியும்.



Copyright © AMNA Trust, Chennai 



*ஜீவசகோதரி சித்ரா:* கடவுள் நிலை அறிந்து அம்மயமான ஒருவர் நம் முன் வந்து அரூபத்தில் உள்ள ஈசனுடன் நம்மை ஞான சம்பந்தம் செய்து வைக்கும் பொழுதுதான், மெய்க்குருபிரானே தத்துவ ரூபமான விநாயகர் என்பதை உணர முடியும். விநாயகரை வழிபடும் காணாதிபத்தியம் அறுவகை சமயத்தில் முதலாவதாக உள்ளது. ஞான முதலாகிய முறம் போன்ற காதாகிய அறிவு கொண்ட ஞானமுதல்வன், கணங்களின் பதியான கணபதி, வினை தீர்க்கும் விக்கின விநாயகர், நெற்றிக் கண்ணுடைய பிரணவ சொரூபி, ஆதிமூலக் கருஉருவான கரிமுகன், வேதநாயகன், ஆறறிவும் ஓரறிவாய் விளங்கும் தொந்திக் கணபதி, தன்னகர ஜீவப் பொருள் கைக்கொண்ட அகரமுதல்வன், கட்டை விரல் பிரமாண வாமன ரூபன், புள்ளியிலிருந்து வந்த பிள்ளையார், நம் விதி எழுத்தை மாற்றி மதி எழுத்துக்கு ஆன முகமாய் மாற்றிய ஆன முகத்தான் என அநேக நாமங்கள் கொண்டவரே விநாயகர். அவருக்குரிய அருகம்புல் மாலை வித்தில்லா வித்தின் சிறப்பையும், மூக்குக் கடலைப் பிரசாதம் துதிக்கும் கையான நான்ற வாயின் தத்துவத்தையும் குறிக்கிறது. இறை திருவடிவே பிள்ளையார் சுழியாக அவரவர் அகத்தில் உள்ளது.

திருவடி ஞானம் பெறுவதற்காக பெரியோர்கள் நம்மை அழைக்கும் அழைப்பே அகவல். முருகப்பெருமான் அருளிய **சுப்பிரமணியர் ஞானத்தில்**, **நானடா நானிருக்கும் இடந்தான் காட்டி னவிலுவார் னன்மார்க்க நாதர்தாமே** என சாலை ஆண்டவர்கள் குறித்து அருளப் பெற்றுள்ளது. எனவே சாலை ஆண்டவர்கள் அருளிய ஞான அகவலே, முன்னூல் என்பதையும் விநாயகர் அகவல் வழிநூல் என்பதனையும் பண்டிதர் யாவரும் அறிவர்.

சாலை ஆண்டவர்கள் அருளிய **வந்ந வேதம்.......எந்ந நாளும் என்றன் குரு நந்நியே (ஞான அகவல்) நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை (விநாயகர் அகவல்)** குருவே நந்தியாகவும் அவரின் வாக்கு தீயாகவும் நம்மை சிவமயம் ஆக்கவும், அவரவருள் துப்புரவாக துலக்கும் ஆசானாகவும், பார்த்தசாரதியாகவும், நம் தலை காக்கும் தீயாகவும், கயிலாசம் செல்ல வாகனமாகவும் உள்ளது.

**அருஞ்ஞுவையு மிளநீரும் னளபாகத் துணவீந்நு (ஞான அகவல்) சீதக்களபச் செந்தாமரை பூம்பாதச் சிலம்பு (விநாயகர் அகவல்).** பல இசை பாடும் மலர்ப்பாதம் நம் அறியாமை அகற்றி அறிவை அறிய வைக்கிறது.

**குருபெருமானாய்க் குவலயம் தன்னில் (ஞான அகவல்) குருவடிவாகி குவலயம் தன்னில் (விநாயகர் அகவல்)** குவலயமாகிய நம் இருள் தேகத்தை ஒளி தேகம் ஆக்குபவரே குருபெருமான்.

**பெரும்பதக் கலிமா பொருளது என்னில் (ஞான அகவல்) பேழை வயிறும் பெரும் பாரக்கோடும் (விநாயகர் அகவல்)** கலிமா எனும் பஞ்சாட்சர அகரப் பொருளே பேழை வயிறாக இருக்கிறது.

**பாயும் சுவாசம் பகரு மீராறும் (ஞானஅகவல்) குண்டலி அதனில் கூடிய அசபை (விநாயகர் அகவல்)** இதுவே ஓதாமல் ஓதி மனம் பிராணனுடன் சேர்ந்து ஓடும் உஜூது நடை.

**பேசாத பெரிதின் பேச்சறிவித்து (ஞான அகவல்) பேரா நிறுத்தி பேச்சுரையறுத்தே இடை பிங்கலையின் எழுத்தறிவித்து (விநாயகர் அகவல்)** பேசரும் பெரும் பொருளான, கலம் கொண்டு எழுதாத எழுத்தெனும் எமன் அஞ்சி நடுங்கும் எழுத்து.

**ஒன்பது வாசலுட் தாளிடவும் ஐம்புலக் கதவை யடைப்பதும் காட்டி (ஞான அகவல்) ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால் ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி (விநாயகர் அகவல்)** ஒன்பது வாசல், ஐந்து புலன்கள் ஒன்றாக அடைக்கும் வாசலே மவுத்திடமான பத்தாவது வாசல்.



Copyright © AMNA Trust, Chennai

**அணுவுக்‌கு கணுவாயண்ட பிரம்மாண்டமாய் னினைவுட் பதியும் னாதமின் னுடலை (ஞான அகவல்) அணுவிற்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய் (விநாயகர் அகவல்)** அரூப வடிவ பிரம்ம விம்ப கோளம், உடலுக்குள் நான் ஆன்மா, பசு; சிற்றணு வடிவாக கோடி சூரியப் பிரகாசமாக இருக்கிறது. அணுக்கோடியிலும் நிறைந்த ஆதி முதல்வனே விநாயகப் பெருமான்.

**சோதியிற் கலந்நே சொற்கடங்ஙானாய் சுத்தசை தன்யச் சிவக்கொழுந்நவனாய் (ஞான அகவல்) சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டி சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி (விநாயகர் அகவல்)** இறைவனின் சாயலாகிய சத்தமே ஜீவனின் அசைவு. மனம் தெளிந்தவர்க்கு ஜீவனே சிவலிங்கம்.

**ஆப்பா யறைந்நாரசையா னிலையில் னிலைத்தன்னிலையில் னின்று காலூன்றி (ஞான அகவல்) மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின் நான்றெழு பாம்பின் நாவினில் உணர்த்தி (விநாயகர் அகவல்)** சோடச நிலையை ஓதாமல் ஓதி இராஜ அங்கத்தில் செய்யும் செயலே இராஜயோகம்.

**இடைச்சக்கரத்தின் ஈரெட்டு நிலை** என்ற விநாயகர் அகவல் கூறும் ஜீவதேக ரகசியம், 9 கிரகம், 12 ராசி, 27 நட்சத்திரம் எனும் ஜீவன் குடியேறிய காலத்தைக் குறிக்கிறது. 12 ராசியில் உள்ளே நுழையும் 9 பாத நிலைகளும் நான்கு கலைகளாக பிரிவதையே **பாயும் சுவாசம் பகருமீராறும் மாயா னான்கும் வயங்விடக்காட்டி** என அருளப் பெற்றுள்ளது. குருவின் அழைப்பாகிய அகவலை நிராகரித்து விட்டால் எமனின் சர்வாதிகார அழைப்பு கட்டாயம் வரும். ஆகவே கடிதாம் பிரளயத்தைக் காட்சி எனக் கடத்தும் வினை தீர்க்கும் விநாயகனாம் குருபெருமானை வேண்டிப் பணிந்து பிறவாமை பெறுவோம்.

**குருபிரான் அருளமுதம்:** அறிவுருவாக, அறியாமை அகற்றும் ஆசானாக, பாத ரகசிய வடிவாக, நாலிரு புயம், மூன்று கண், மும்மதச் சுவடுடன் நெற்றிக்கண் படைப்பவரே விநாயகப் பெருமான். மனம் எனும் ஏதேன் தோட்டத்தின் உள்ளே நாம் நுழைய வழியின்றி காலம் வீணாகிறது. ஞானிகளின் தேகமும் அழிவுக்கு உரியதே. அழி தேகத்தின் உள்ளே, அழியா தேகத்தில் அமர்வதே அமரருள் உய்க்கும் அடக்கம். பேரற்ற உடம்பெனும் ஊர்தி சேருமிடம் சுடுகாடு. **சுக்லாம் பரதரம்** எனும் கணபதி மந்திரம் பிள்ளையார் சுழியான விந்து நாதத்தின் சிறப்பாகும். தன்னை அறியும் அறிவை அறிவிக்கும் தத்துவத் திருமேனியே விநாயகப் பெருமான். கொடுவினை களையும் கோடாயுதமும், அங்குச பாசமும் கொண்டு நம் வினை அறுத்து பிறவாமை பெற வைப்பவரே விநாயகர் என்ற அருள் வர்ஷிப்புடன் குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.

## 21-09-2023 ~ வியாழக்கிழமை சபை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஶ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்

சாலை ஆண்டவர்கள் அருளிய **அரியானை அறிய வைத்து…** எனும் தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

*ஜீவசகோதரர் சங்கர்:* அரி எனும் இறை பொருளை அறியாமல் இருந்த நம்மை, தன் நாத தணலால் அந்தணனாக்கி, ஆறு ஆதார நிலை தெரிய வைத்து இருளெனும் அறியாமை அகற்றி, பெரியான் இன்னாரென அகமியத்தில் உணர்த்தி, சரிநிலை எனும் சமத்துவத்தில் ஏற்றி வைத்த சாலை எனும் மெய்மேனியான குருகொண்டலின் திருவாயில் ஆழ்ந்து வாழ்வதே வாழ்வு.

**வான்மதிக் கொரல் வாக்கியம் எண் 120 – தொடர்ச்சி :** மக்களால் ஒழிக்க இயலாத பிறவிப் பிணி தீர, ஒரு மெய் குருபிரானை தேடி சரணடைந்து, வாசனாச் சயம் மனோ னாசமெனும் செயமடைந்து சாந்தி அடைய வேண்டியதே மனித வாழ்வின் பெரும்பயன். ஏதுமிலாத ஏழைக்கு, சகலமும் கொடுத்த ஒரு பணக்காரன், பின்னர் அவனை எப்போதும் குறை கூறினால், அவனை எதிர்க்கும் குணம் ஏழைக்கு வந்துவிடும். தன் குற்றம் கண்டு முதலில் நீக்க வேண்டும். ஐந்தாறு கடலையை விட அதிக அளவில் வாயில் திணித்தால் மூச்சு திணறி உயிர் போக ஏதுவாகும். அது போல் அறிவுக்கான படிப்பையும் கொஞ்சும் கொஞ்சுமாக வளர்த்து ஜீவனில்



Copyright © AMNA Trust, Chennai 

பதிப்பிக்க வேண்டி உள்ளது என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். நின்றோர்கள் நிலையறிந்து கொடுக்கும் வள்ளலாகிய பெரியோர்கள் தங்களின் அருளமுத வர்ஷிப்பால் பையப்பைய மெய்யறிவு உதயம் காட்டி அழியாத நித்திய வாழ்வில் நம்மை புகுத்தாட்டி வைக்கிறார்கள்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **அழகு அணி சித்தர் பாடல் எண் 30 - சித்திரத்தை குத்தியல்லோ...** வடிவற்ற கல்லை உளியால் செதுக்கி சிற்பம் வெளிப்படுவது போல், குருபிரான் தன் நாவாஸ்திரத்தால் நம் அறியாமை அகற்றி அறிவை மிளிரச் செய்கிறார்கள். உடல் தாங்கும் உத்திரமாகிய ஜீவனை ஆசான் அருளால் கண்டவர் சிவமாகி, ஆசானும் தானும் ஒன்றான நிலையை கண்ணம்மா என்ற தாயிடம் உரைக்கிறார்கள்.

*ஜீவசகோதரர் சங்கர்:* **ஊரான ஊர் உயிர் பயிர் ஏற்றும் ஊர்** என, ஆசானின் அருளமுதே உத்திரமாக மெய் உணர்வு ஓங்கும் சித்திரமாக சித்தத்தின் திறமாக உள்ளது.

**குருபிரான் அருளமுதம் : தெய்வத் தேடு கூடகம் :**

இருதய சுத்தமான மெய் ஆண்டவர்களின் தயவால், னீண்ட எக்காளம் ஊதும் அகமிய ரகசியம் அறிந்து எமனை சங்நாரம் செய்தால் னீதிநெறி வாழ்வில் குடியேறலாம். இறைவன் வகுத்த னீதிக்கோட்டில் இருந்து, ஆறறிவு பெற்றும் ஐயறிவு நுகர்ச்சியில் வாழும் மானிட சட்டை தாங்கிய நரனே பிறழ்கிறான். மனம் போன போக்கில் அழி நரக இலக்கு நோக்கி செல்லும் நரனுள் மாண்டு கிடக்கும் மனுவை, தேவனாக்கி தெய்வமாக்கும் சாயுச்ய அரசரான மெய் குருபிரானே அவரவர் உருவத்தை அதிக தெளிவுபடுத்தி பிரதிவிம்பமாக காட்டும் தெய்வக் கண்ணாடியாகத் திகழ்கிறார்கள்.

கால கால னீள காலமான நம் வயது வாழ்நாள் வீணாகி கரைந்து உடல் சாயுங் காலமான சாங்காலம் வருமுன்னே, மீட்புத் தவம் அருளும் மெய்ஆசானின் நாதம் கொண்டு ஆன்மா லயமாகி தன் பெருவெளியாகிய சாலையில் குடியேறி வாழ்வதே நித்திய வாழ்வு. நமது காலத்தின் இருப்பு அறியாமல், நாளெல்லாம் கடை நாளாகி ஆலம் அழிநேரம் வரும் முன்பே, ஆதிகூடகத் துறையில் ஆகிக் கொள்வதே தீர்க்க தரிசனமாக கூறப் பெற்றுள்ளது. இவ் அரிய நிலைகளை உணர்ந்தவர்களாக ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள் உள்ளனர். அறிவு தெளிவிற்கான அத்தனை நிலைகளையும் செயலாக்கி வைப்பதே ஆதி மார்க்க னீதி அவை என அருளி தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.

**23-09-2023 ~ சனிக்கிழமை சபை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்**

பிரம்மப்பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **எழில்பல கலைகளிலகு செம்மலரே...** எனும் தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:** பாவ புண்ணியம் இன்னதென்றும், மூச்சு அதிகம் உள்வாங்குவது, குறைவாக வெளியேறுவது, மூக்களவே ஓடுவது, ஓடாத நிலை என்றும் ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். மூக்குக்கு வெளியே மூச்சோடாத னிலையும், நாசி வெளியே மூச்சோடா தவனிலையும் ஒரு அரிய சோங்காக வரும் மெய்க்குருவின் இரக்கத்தால், ஓயாத் தொழுகை அறிந்து ஒன்பது வாசல் கடந்து அப்பால் காலமற்ற இடத்தில் குடியேறும் செயலாக உள்ளது.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் 145:** வேதத்தைப் படிப்பதன் பயனும் பலனும், ஆசானின் அறிவான திருவாக்குகளை கேட்டதும் மனம் திரும்பி சரணாகதி அடைந்து வேதம் காட்டும் அறிவின் வழி நடப்பவனுக்கு அதுவே ஜீவனை ரட்சிக்கும் போர்வையாகவும், தன்னறிவில் சாய்ந்து மனவழி போனவனுக்கு அதுவே பக்ஷிக்கும் ஆயுதமாகவும் மாறிக் கொள்ளும் என்பதை இத்திருவாக்கு உணர்த்துகிறது.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **சத்தியவேதம் : யோவான் - 1:1,2** *ஆதிமுதல் நாங்கள் கேட்டதும், கண்டதும், தொட்டதுமான, பிதாவினிடமிருந்து, வெளிப்பட்ட நித்தியமான ஜீவ வார்த்தை குறித்து சாட்சி கொடுத்து உங்களுக்கு அறிவிக்கிறோம்.* பிதா சுதன் பரிசுத்தஆவி என மூன்று



Copyright © AMNA Trust, Chennai 

நிலைகளில் இருந்து அருள்பாலிக்கும் கர்த்தராகிய குருவின் நித்திய ஜீவவார்த்தையைக் காதாகிய அறிவால் கேட்டும், நெற்றிக் கண்ணால் கண்டும், உள்ளமாகிய கையால் தொட்டும் நித்திய ஜீவனை குறித்த சாட்சி அளிக்கிறார்கள். ஜீவனை காண்பதே விஸ்வரூப தெரிசனையாகவும் ஜென்மசாபல்யச் செயலாகவும் உள்ளது.

**குருபிரான் அருளமுதம்:** தன்னையறிந்த மக்களுக்கே தேவத்திருவாக்கான பரலோக மன்னாவை அனுதினமும் புசிப்பது தேனாகத் தித்திக்கிறது.

*ஜீவசகோதரர் கோபி:* ஓரறிவு முதல் ஐயறிவு வரை இதுகாலம் வரை இல்லாத பரிணாம வளர்ச்சி, ஆறாவது அறிவை தனிச்சீதனமாக இறைவனிடம் பெற்று வந்த மனிதனிடம் ஒவ்வொரு காலத்திலும் அறிவின் பரிணாம வளர்ச்சியாக உள்ளது. குருவருளால் ஞானம் உணர்ந்த மனிதனுக்கு, புதிய கண்டுபிடிப்புகள் யாவும் அறிவுக்கு சாதகமாகவும், உணராதவனுக்கு பாதகமாகவும் உள்ளது.

**குருபிரான் அருளமுதம்:** விஞ்ஞானத்தின் பரிணாம வளர்ச்சி என்பது தன்னறிவில் சாய்ந்து கீழ் நோக்கமான எண்ணத்தால் அழிவுக்கும், அதுவே மெய்ஞ்ஞானத்தில் மேல் நோக்கமான அறிவாகி அழியாமைக்கும் இட்டுச் செல்கிறது. மெய்யான பரிணாம வளர்ச்சியானது மெய்க்குருவின் பெருங்கருணையால் னரனாக இருந்தவனை மனுவாக, தேவனாக மாற்றி, சொர்க்கத்திற்கு ஆளாக்கும் மெய்ச்செயலாகும்.

**குருபிரான் அருளமுதம் - தெய்வத்தேடு கூடகம்:**

காலச்சக்கரம் சுழல்வதை ஓயாத்தொழுகை மூலமாக தன்னுள் அணு வடிவாகக் கண்டு, பூமி மற்ற கிரகங்கள் யாவும் சிறு கடுகு போல உருண்டு கிடப்பதாகவும், 96 தத்துவங்கள் 96 வேலையாட்களாக எஜமானை அறியாமல் வேலை செய்வதையும் கண்டதாக ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். சென்னெறிச் சீர் நவக்கிரகக் கோளரி வாளால் வினையறுத்து மறுபிறப்பென்னும் தேவப்பிறப்பில் ஆக்கி, ஜீவ முத்தியுடன் தேக முத்தியும் அடையும் செயலே தீர்க்கதரிசனம். ஏழாவது பிறப்பான அறிவு பிறப்பில் ஆக்கி வைப்பது தூல முத்தியாகவும், ஜீவேசத்தகை வாழ்வில் சாந்தியெனும் சலாமத்தில் ஆக்குவது ஜீவ முத்தியாகவும் உள்ளது. இவ்வுடல் உள்ள போதே அந்நாட்டிற்கு வாதையற்று போக்கு வரத்தாகும் செயலை திருப்புகழில் அருணகிரிநாதரும் **இக்கடத்தை னீக்கி அக்கடத்துள்ளாக்கி இப்படிக்கு மோட்சம் அருள் வாயே** என அருளியுள்ளார்.

தெய்வத்தேடு கூடகத்தின் தீர்க்கதரிசனச் செயல் எக்கால மக்களுக்கும், பரிசுத்த ஆவியை அறிந்து அடையக்கூடிய செயலுடைய கிரந்தமாக உள்ளது. முடிவற்ற வாழ்வுக்கென இறைவன் சீராகத் தந்த அமானிதமாகிய திருவடி ஞானமே சிவமாக்கும், சிவலோகம் சேர்க்கும், சிறை மலம் மீட்கும், தின்சித்தி முத்தியாகவே ஆக்கும். தெய்வத் தேடு கூடகத்தின் சிறப்புகள் தினம் தொடர்ந்தோரைத் தொடர்ந்து கொண்டணைக்கும் சஞ்ஜீவியாக என்றென்றும் உள்ளது என குருபிரான் அருளி தோத்திரப் பாடலுடன் அவையை நிறைவு செய்தார்கள்.

## 28-09-2023 ~ வியாழக்கிழமை சபை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

சாலை ஆண்டவர்கள் அருளிய **செல்வச்சீர் னபியை அந்நர்மா முகமாய்த் தெரிசனை காண்பதும் திடனே...** எனும் தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**மிலாடி னபி :** ***திக்கெலாம் புகழும் மக்கமா னகரின்ஙண் எழுந்நருளிய புனிதகோமள னான்மறை யரசு னீங்கா னன்னிலத்து வேந்நராகிய னம் மனுக்குல னாயகம் முகம்மது சல் ஆலனபியவர்கள்*** ஹிஜிரி 1380ம் ஆண்டு ரபியுல் அவ்வல் மாதம் 12ம் தேதி அவதாரம் செய்த திருநாள்.

**வான்மதிக் கொரல் - திருவாக்கியம் எண் : 120** மெய்வழி சாலை ஆண்டவர்கள் 12-02-1972ல் பதிமறைவு செயலில் தலை வைத்ததற்கான அடையாளம் தன் தேகத்தில் வந்து விட்டதையும், பிரளயத்தை நடத்தப்போவது தான் தான் எனவும், தன் ஆசானை சந்தித்த பின்னர் தவ விளைவு



Copyright © AMNA Trust, Chennai 

கொண்டு ஏறி, தாய் தந்தையிடம் இருந்து வந்த தேகமானது முற்றிலுமாக மாறிவிட்டதையும் அறிவிக்கிறார்கள்.

**குருபிரான் அருளமுதம்:** மெய்வழி ஆண்டவர்கள், தாம் பதிமறைவாகும் நாளை நான்கு வருடம் முன்பே துல்லியமாக பேரறிவு கொண்டு அருளியுள்ளார்கள். பிரளயம் வந்து மோதும் உட்பொருள் ரகசியம் மெய்யறிவு பெற்றவர்களுக்கே விளங்கும். பிராணனை இயக்கும் பிரணவ சொரூபம் இறை பொருளாக அவரவருள் இருக்கிறது என்ற தேவரகசியம் அறிந்தவர்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள். 24 அட்சரங்கள் கொண்ட கலிமாவும், காயத்ரி மந்திரமும் ஒன்றே. ஏழ் நிலைக்கம்பம் எனும் அமானிதத்தின் முதற்பொருள், ஜலத்தினில் அக்னி உருவாய் நிற்கும் ஜீவனே. தனது னாற்பதாம் வயதில் னபித்துவம் பெற்ற னபிகள் னாயகத்தின் குருபிரான் கலைகோட்டு மாமுனி என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். அதே குலத்தில் வந்த முகமது சாலிஹு எனும் தனிகை மணிப்பிரான் அவர்களே தனது நான்காவது சீடராக மெய்வழி ஆண்டவர்களை ஆட்கொண்டார்கள். னபிகள் நாயகம் பெண்களின் மேன்மைக்காக பாடுபட்டும், விக்கிரக ஆராதனை கூடாது எனவும் கூறி மக்கமா நகரின் எதிர்ப்புக்கு ஆளாகி, மதினா சென்றடைந்து, பின்னர் மதினா மக்களின் துணையுடன் மக்கமா நகரை தன் வசமாக்கி இஸ்லாம் என்ற மதத்தை ஸ்தாபித்தார்.

குருபிரானை குறிக்கும் சொல்லே வஹி என்பதாகும். குருவில்லாமல் யாரும் ஞானம் பெற முடியாது. குருவின் சிறப்பை உணர்த்தும் பல நாமங்களும் இஸ்லாத்தின் சிறப்பாகும். கல்வித் தந்தையான ஹயக்ரீவர் வானமுதமாக அருளிய திருக்குர்ஆன் வேதத்தில் நபியே ஓதுவீராக ! அல்பகரா எனும் ஜீவனின் ரகசியத்தை ஓதுவீராக! என அருளப் பெற்றுள்ளது.

அலீப்- லாம் - மீம் என்ற முதன்மை பொருளின் இரகசியமே கிறிஸ்துவில் பிதா- சுதன் - பரிசுத்தஆவி எனவும் சைவத்தில் அருவம் - உருவம்- அருவுருவம் எனவும் உள்ளது.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* வான்குலமான அறிவுக்குலத்தில் அவதரித்து வந்த னபிகள் னாயகம், இஸ்லாத்தின் 5 கடமைகளாக 1.கலிமா 2.தொழுகை 3.நோன்பு 4.சகாத் 5.ஹஜ் என்பதை அறிவித்தார்கள். னபித்துவம் பெற்ற னபிகள் னாயகம், ஜிப்ரேல் எனும் வானவர் தூதர் மூலம் தேகத்துடன் இருக்கும்போதே சொர்க்கம் நரகம் சென்று வந்தவர் என்றும் குறிப்பிடுகிறார்கள். கி.பி. 632ல் னபிகள் மறைவுக்கு பின்னர் அபுபக்கர், உமர், அலி, உதுமான் எனும் அவரின் தோழர்கள் இம் மெஞ்ஞானத்துக்கான கலிபாக்களாக இருந்தார்கள்.

*ஜீவசகோதரி பானுமதி:* **மிலாடி னபி -** னபி பெருமானின் அவதார திருநாள். கி.பி. 570. குரைஷிக் குலத்தில் மெக்கா நகரில் தந்தை ஹஜ்ரத் அப்துல்லாஹ் - தாய் ஆமினாவின் மகனாகப் பிறந்து, ஹிரா குகையில் னபித்துவம் பெற்று அரேபிய தீபகற்பம் முழுவதும் இஸ்லாம் என்ற கொள்கையை பரப்பினார். மக்கள் அவரை நம்பிக்கையாளர் (அல் அமீன்) உண்மையாளர் (அஸ் சாதிக்) எனப் போற்றினர். உலக ஆசையிலிருந்து விடுபட்டு இறைவனிடம் சரண் அடைந்து கீழ்ப்படிந்து வாழ்வதே இஸ்லாம் என்பதை னபிகள் நாயகம் மக்களிடையே போதித்தார். னபியவர்கள், ஹிஜிரி 1380ம் ஆண்டு ரபியுல் அவ்வல் மாதம் 12ம் தேதி அவதாரம் செய்த அதே திருநாளில் இவ்வுலக வாழ்வையும் நீத்தார்கள் என்பது சிறப்புக்குரிய நிகழ்வாகும்.

**குருபிரான் அருளமுதம்:** ஆதி மார்க்க னீதி அவைக்கான திருஸ்தலம் திண்டிவனத்தில் பதிவு செய்யப்பெற்றது வரலாற்று சிறப்புமிக்க ஒன்றாகும். மனம் பூத்த திருமேனியராய், மதி பூத்து ஒளிர் னாவுடைய வள்ளலாய் வனப்புடன் வந்து எல்லாக் காலங்களிலும் மக்களுடைய இதயச் செழிப்பேற, இனும் பூத்தே பூத்தொளிரும் எங்கள் மதினத்தரசராம் பிரம்மப்பிரகாச சாலை ஆண்டவர்களின் இருதாள் போற்றி பணிந்து, அனைவரும் பிறவாமை பெற வேண்டி தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் இனிதே நிறைவுற்றது.

> *பிரியமானவளே! தார்க்கிகரும், வாயில் வேதத்தை ஓதுவோரும், சோதிடத்தை அறிந்தோரும், கர்மாக்களைச் செய்வோரும், இலெளகீகரும் சிதைவின்றிய குருதத்துவத்தை யறியார்கள்.*
>
> ***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

**30-09-2023 ~ சனிக்கிழமை சபை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**குருபிரான் அருளமுதம்:**
சாலை ஆண்டவர்கள் அருளிய **உபனிடதத் தெளிந்நவொளி மலையின் பாதம்…** என்ற ஆனந்நக் களிப்பு பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது. தாயின் மிக்காங் ஙருணை கொண்டு, ஊன்றிய திருப்பாதமாகவும், தூக்கிய திருவடியாகவும் நின்று விளங்கும் இருபாதத்தின் இரகசியத்தை உபனிடத வைப்பின் மூலம் தெளிவித்து ஆனந்த களிப்புடன் வாழ வைத்து கொண்டிருக்கும் னிபுணமணி விளக்காம் ஆசான் பாதத்தை போற்றி பணிவதே பரத்தின் னன்னிலையில் நம்மை ஏற்றி வைக்கும் மெய்ச்செயல் ஆகும்.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் - திருவாக்கியம் எண் 146 :** அஞ்ஞானத்தால் எமபயத்துடன் வாழும் நம்மை, வீரமாக பழக்கி மெய்ஞ்ஞானத்தின் மேல்நிலையில் ஏற்றி வைக்கவே, எமனை மிதித்தேறும் வல்லபத்துடன் புலியின் வீரத்தை தன்னகத்தே கொண்ட பரமாத்ம சொரூபர், பசு வேடம் தரித்து ஜீவகாருண்யராக அவதரித்து வருகிறார்கள்.

*ஜீவசகோதரர் விஜயகுமார் :* **பரிசுத்த வேதாகமம் :**
**யோவான் அதிகாரம் : 1 திருவசனம் - 7 & 8** *சகோதரரே, நான் உங்களுக்கு ஆதி முதல் கேட்டிருக்கிற வசனமாகிய பழைய கற்பனையையே எழுதுகிறேன்…* ஆசானின் ஆணி மொழியே புது பழமொழி. அறியாமை எனும் இருளை விலக்கி அறிவு பிரகாசத்தை அளிக்கும் உயிராணி திருவசனமே கற்பனை கடந்த சஞ்ஜீவி வாழ்வில் நம்மை வாழ வைக்கும்.
**யோவான் 3:9** *தேவனால் பிறந்த எவனும் பாவஞ் செய்யான். ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது …* சகல நன்மைகள் பொதிந்த வித்தில்லா வித்தாகிய ஆசானின் னாதம் மூலம் மறுபிறப்பு பெற்றவர்கள், மூச்சு துண்டாடப்பட்டு நஷ்டமடையும் பாவச்செயல் செய்வதில்லை.

*ஜீவசகோதரர் கோபி :* **ஸ்ரீமத் பகவத் கீதை - பக்தி யோகம் :** நிர்குண பிரம்மம், பக்தி - இதில் எதன் மூலம் முத்தி அடைவது எளிது? என்ற அர்ஜுனர் கேள்விக்கு பகவான் விடையருளும் அத்தியாயமே பக்தி யோகம். அந்தகரணத்துள் இயங்கும் முக்குணத்தின் மூலம் செயல்படும் மனம், கீழ் னோக்கத்தில் செல்லும் போது கர்மவினை உண்டாகி பாவமாகிறது. ஆசான் அருளால் மேல் னோக்கமாகும் போது நிர்குணமாகி கர்ம யோகமாகி பக்தி உண்டாகிறது. மெய்குருவிடம் சரணடைந்து முப்பொருள் தத்தம் செய்து கதி சாதனை அடைந்து முத்தினெறி பெற்றவர்களே பக்திமான்கள் என உணர்த்துவதே பக்தியோகம்.

**குருபிரான் அருளமுதம் - தெய்வத் தேடு கூடகம் :**
**தென்திசை ஆதி திருமுகமே…. தூல முத்தி :** நித்தமும் கணநேரமும் நிகழ்ந்து கொண்டே இருக்கும் மரணத்தை மாற்றி வைக்கும் பிரம்மவித்தை செயலினை அருளும் புண்ணிய உருவாக வரும் ஆசானின் அடினிழலில் தஞ்சம் புகுந்தவர்கள் பிண்டம் பூந்து இனி பிறவா நிலையாகிய தூல முத்தி பெறுகிறார்கள். அரும்பெரும் இம் மெய்ச்செயலை வழங்கிட அழைத்த ஆண்டவர்களின் வசந்த அழைப்பு, எக்காலத்தும் செல்லும் வில்லோசையாக இருப்பதை செயலளவில் உணர்ந்து, அழைத்திடும் காலத்தில் அருளுண்ணும் மக்களாக ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள் உள்ளனர் என்ற குருபிரானின் அருளுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai 

**இசை வகுப்புகள்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**24-09-2023 ~ ஞாயிற்றுக்கிழமை**

குரு கொண்டல் அவர்களின் வழி காட்டுதலுடன் **சேவடிச் சேகரம் விண்டென்மா தவத் தொண்டர்கடன்..** என்ற பாடல் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று, அவை இனிதே நிறைவுற்றது.

**குரு வா ஆழ்க ! குருவே துணை !!**

*தேவ கின்னர கந்நருவர்களும், பித்ரு, யக்ஷர், தும்புருவர், முனிவர்களும் குரு பணிவிடையின் விதியினை இவ்வளவு துல்லியமாக அறியார்கள்.*


***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

# ஆதி மார்க்க நீதி அவையின் 2023 – செப்டம்பர் மாத நிகழ்வுகள்

**03-09-2023:** ஜீவதம்பதியர் வாசுதேவன்-லாவண்யா அவர்களின் புதல்வி **லதாங்கி -** ஜீவதம்பதியர் வெங்கட்ராமன்-பாரதி அவர்களின் புதல்வன் **அஜய்கிருஷ்ணா** இருவருக்கும் சென்னை ஆவடியில் நடைபெற்ற திருமண வைபவத்தில் குருபிரான் சாலை ரவி அப்பா அவர்கள் எழுந்தருளி மணமக்களை ஆசீர்பாதம் செய்தார்கள்.



**10-09-2023:** குருகொண்டல் சாலை ரவி அப்பா அவர்களின் ஆசீர்பாதத்துடன், ஜீவசகோதரி சாந்தி - மோகனகோட்டி அவர்களின் புதல்வன் பிரவீன் - மணப்பெண் திவ்யபாரதி, இவர்களது திருமணம் சென்னை வடபழனி ஆண்டவர் திருக்கோவிலில் நடைபெற்றது.





Copyright © AMNA Trust, Chennai

**11-09-2023:** குருகொண்டல் சாலை ரவி அப்பா அவர்களின் ஆசீர்பாதத்துடன், ஜீவதம்பதியர் காளிதாஸ்-தபேஸ்வரி அவர்களின் புதல்வன் பரணிதரன் - மணப்பெண் தரணி ஸ்ரீ, இவர்களது திருமணம் பொள்ளாச்சி ஸ்ரீ சாய் மஹாலில் சிறப்புடன் நடைபெற்றது.



**18-09-2023:** திங்கட்கிழமை சிவகாசியில் ஆதி மார்க்க னீதி அவையின் **2022** ஆண்டு மலர் குருபிரான் திருக்கரங்களால் வெளியிடப்பெற்றது.





Copyright © AMNA Trust, Chennai 

**18-09-2023:** குருபிரான் சாலை ரவி அப்பா அவர்களின் அருளமுத வர்ஷிப்புடன், வினாயகர் சதுர்த்தி சிறப்பு அவை சிவகாசியில் சிறப்புடன் நடைபெற்றது. அவையில் கலந்துகொண்ட அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பெற்றது.









Copyright © AMNA Trust, Chennai 

**24-09-2023:** குருபிரான் சாலை ரவி அப்பா அவர்கள் கோவளம் தர்காவிற்கு தனது சீடர்களுடன் விஜயம் செய்தார்கள்.




**27-09-2023:** திண்டிவனம் ஏவலூர் கிராமத்தில், ஆதி மார்க்க னீதி அவையின் தேவைக்காக சுமார் நான்கு ஏக்கர் நிலம் வாங்கப் பெற்று இருக்கிறது.

### சரவண நந்தவனம்



## ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்


| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **29-11-2023 / சென்னை** | மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா அவர்களின் அவதாரத் திருனாள். |



Copyright © AMNA Trust, Chennai 

# உற்றெழுத்து உணர்த்தல் – 3

உற்றெழுத்து உணர்ந்த மக்கள் அதனை வரும் **நவம்பர் 10**ம் தேதிக்குள் write2amnatrust@gmail.com முகவரிக்கு, அல்லது Whatsapp எண் +917305972399 அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம். சரியான உற்றெழுத்தை அனுப்பிய முதல் 10 அன்பர்களின் பெயர்கள் புரந்தரர் பொன்னேடாக மின்னி வரும் மின்னணு சஞ்ஞிகையில் மின்னுவது திண்ணம்.




## இடமிருந்துவலம்:

1) அத்வைதத்தின் இன்னொரு பெயர். (5)
3) ஆகாயம் என்பது இதுவே. (4)
5) வேடதாரிகளின் இந்த முரீது கலைந்துள்ளது. (4)
12) இங்கிருக்கும் பனியை இப்படி குறிப்பிடலாம் கலைந்துள்ளது. (3)
13) ஒரு பொருளின் நடு. (2)
14) மெய்யே விரும்பவேண்டும் என்பதற்கான சொல். (2)
15) இது கூட்டுவதில் உப்பு தான் ராஜா. (2)
16) வைகுண்டம் காண வந்தவர்களின் பெயர். (3)
18) பஞ்ச பூதங்களுள் ஒன்று. (3)
20) இப்படியான மனமே முக்திக்கான வழி. (4)
22) உலகு என்பதின் பெயர். (2)
23) எச்சரிப்பு. (3)
25) மண்ணே இந்த மனுக்களை எழுப்பும் இடம். (3)
27) ஆன்மா நீ தான் என்பதனை உணர்த்தும் சொல். (2)

## வலமிருந்து இடம்:

4) 27 நட்சத்திரங்களுள் ஒன்று (3)
8) ஜாடை பாஷையில் அழைக்கையில் கூறும் ஆங்கில வார்த்தை (2)
11) முகத்தின் இன்னொரு பெயர் (5)
19) ஒரெழுத்து சேர்ந்தால் பெரியோர்களின் வாய்மையாகும் (3)
26) இதனை செய்து உணர வேண்டியதே வேதம் (2)
28) ஒரு நாளின் எட்டு பங்கு (3)



Copyright © AMNA Trust, Chennai　

**மேலிருந்து கீழ்:**

1) இப்படியான பிரணவத்தை அறிய ஆசான் துணை வேண்டும் (4)
2) இந்த செயலுடையதே அறம் (8)
7) எதை மறந்தாலும் இதனை மறவேன் என்பர் மெய்குருவின் சீடர்கள் (5)
8) இதனை அறிந்தவரைக் காண்பது அரிது (3)
9) சூரிய ஒளியின் கற்றை (3)
15) இதனை சொல்வது எளிது செய்வது கடினம் (5)
17) மென் எனும் வார்த்தை சேர நினைவை குறிக்கும் சொல்லாகும் (3)
21) மேல் என்பதனை குறிக்கும் சொல் (2)
22) அறிவை அறிவதற்கு படிக்க வேண்டியது (3)
25) மானம் உள்ளவன் (2)

**கீழிருந்து மேல்:**

5) சமஸ்கிருத மொழி இயலின் தந்தை (3)
6) முனிவர்களின் கோபமே இது (3)
10) நெற்றிக்கண் கலைந்துள்ளது (4)
14) தேசம் என்பதை இப்படியும் கூறலாம் (2)
24) முக்கனியின் இதனுடன் தேன் சேர்த்தால் அமுதாகும் (2)
26) இதுவே மனுவை ஈசனாக்கும் (9)
28) இதன் நிலை அறிந்தவர்கள் சித்தர்கள். (2)

குறிப்பு: உற்றெழுத்து அனுப்பும் வழிமுறை: கட்டம் வரைந்து அனுப்பாமல், "இடமிருந்து வலம்.... கீழிருந்து மேல்" என்ற தலைப்புடன் அதற்குரிய எண்ணும் பதிலுமே போதுமானது.

**செப்டம்பர் மாதம் 2023 வெளியான**
**உற்றெழுத்து உணர்த்தல் – 2: விடை**

**இடமிருந்து வலம்:**
1. வலம்புரி 4. மடம் 5. ரதகஜதுரகபதாதி 12. மாலி 15. குருநந்றி 20. திடம்

**வலமிருந்து இடம்:**
3. அகவல் 10. னமது 11. சதுர் 14. பாய் 17. கைபர் 18. பணம் 19. னதி 21. கருவி
22. இன் 23. அருட் 24. அமரும் 26. தபம்.

**மேலிருந்து கீழ்:**
1. வக்ரதுண்டர் 2. வம்பர் 3. அந்நிசந்நி 4. மரண 6. கனமாய்கை 9. தாது 13. உருபதி
15. குண 16. பகரும் 21. கரு.

**கீழிருந்து மேல்:**
7. ஜம்பு 8. கடல் 14. பாலி 24. அன்னம் 25. பட்ட 26. தரும்.

**சரியான உற்றெழுத்தை அனுப்பிய அன்பர்கள் –**

கல்பனா
சருபா



Copyright © AMNA Trust, Chennai

**2023 செப்டம்பர் மாதம், AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை அளித்தவர்கள்**

| | |
|---|---|
| மாதவன் | செல்லம்மா |
| ஸ்ரீமா | பாஸ்கர் |
| மகிமா | உமாராணி |
| சபிதா | ராஜமகேஷ் |
| கிருத்திகா | தியாகராஜன் |
| வடிவேலன் | பொன்லக்ஷ்மி |
| தனராஜன் | பழனிகுமார் |
| ஜெயப்பிரகாஷ் | கார்த்திகேயன். ஆவடி |
| பழனிவேல் | ஜீவானந்தம். சிவகாசி |
| புன்னகை | மகேஷ். மதுரை |

AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கு ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

Account Name: **Aathi Margha Neethi Avai**
Account Number: **50200047470073**
IFSC: **HDFC0000323**
Branch: **Mylapore**



Copyright © AMNA Trust, Chennai

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்சிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 27 – Month: October 2023*